[1973 மார்ச் 27

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பழனி கோவிலில்தான் அதிகமான முடி வருமானம் வருகிறது.

திரு. ஆ. பரந்தாமன்: இந்த முடியை தனியார்கள் வாங்குகிற வரையில் நல்ல கிராக்கி இருந்தது என்றும், எஸ்.டி.ஸி. எடுத்துக் கொண்டதற்குப் பிறகு கிராக்கி குறைந்துவிட்டது என்றும் சொல்கிறார்கள். ஆகவே, மீண்டும் தனியார்களுக்கே கொடுத்துவிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பரேஷன் எடுத்துக்கொள்கிற வரையில்தான் அதிக விலை நமக்குக் கிடைத்துக்கொண்டிருந்தது. அவர்கள் தேவை இல்லை என்று சொல்லிவிட்ட காரணத்தினால்தான் தனியார்களுக்கு பொது ஏலத்தில் விற்கிறபோது குறைவான விலைதான் நமக்குக் கிடைக்கிறது.

Temples in platforms of Madras City.

* 535 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to clear all the platform temples in Madras City;

(b) if so, when this will be done; and

(c) the reasons for the delay?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) & (உ) வினாவுக்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி: சென்னையிலே, இப்போது தமிழகத்தில் மக்கள் பெருக்கம் அதிகமாகியிருப்பதைவிட சாமிகளின் பெருக்கம் அதிகமாகி ஒவ்வொரு நாளும் திடீர் திடீர் என்று ப்ளாட்பாரங்களைப் பார்க்கும்போது மூன்று நான்கு சாமிகள் உருவாகிவிடுகிறார்கள். அதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, உடனடியாக அவைகளை அப்புறப்படுத்தி பொதுமக்களுக்கு நன்மை பயக்க நம் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: நடைபாதைகளில் திடீர் என்று ஏற்படுகிற கோவில்களைத் தடுக்கவேண்டுமென்று சொல்லித்தான் கொஞ்ச நாட்களுக்கு முன்னால் அறநிலையத் துறை சார்பில் ஏதாவது சட்டம் கொண்டு வரலாமா என்று

1973 மார்ச் 27]

யோசிக்கப்பட்டது. அதன் பயனாகத்தான் அறநிலையத் துறை ஆணையாளர் அவர்கள் புதுக் கோவில்கள் அல்லது பொது வழிபாட்டுக்குரிய நோக்கோடு கட்டப்படுகிற கட்டடங்களுக்கு அறநிலையத் துறை ஆணையாளருடைய முன் அனுமதி பெற வேண்டும் என்ற ஒரு திருத்தம் கொண்டுவரலாம் என்ற யோசனையைச் சொன்னார்கள். ஆனால், அதுபற்றி கிராம வளர்ச்சி-உள்ளாட்சித் துறைச் செயலாளர், சட்டமன்றச் செயலாளர் ஆகியோர்களுடன் விவாதித்து ஏற்கனவே 1920-ம் ஆண்டு நகராட்சிகள் சட்டத்திலும் 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சித் சட்டத்திலும் இப்படிப்பட்ட புதுக் கோவில்கள் உருவாவதைத் தடை செய்யவும், ஏற்கனவே உருவாகியிருக்கிற கோவில்களை அப்புறப்படுத்தவும் வழிவகைகள் இருக்கிற காரணத்தால் புதிதாகச் சட்டம் வேண்டாம் என்று சொல்லி முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் இப்போதிருக்கிற கோவில்களையும், இனிமேல் உருவாக்கப்படுகிற கோவில்களையும் தடுக்கிற வகையில் அந்தந்த நகராட்சிகளுடைய ஆணையாளர்களுக்கும், இந்தத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கும் போதுமான அறிவுரைகள் வழங்கப்பட்டு இந்த விஷயத்தில் அவர்கள் கண்டிப்பாக இருக்கவேண்டும் என்று அரசு சார்பில் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்னை கார்ப்பரேஷன் மேயர் ஒருவர் இம்மாதிரி இப்படிப்பட்ட ப்ளாட்பாரங்களில் இருக்கக் கூடிய கோவில்களை எல்லாம் அவை இடைஞ்சலாக இருந்தால் மாற்றப்படும் என்று சொன்னார்கள். அதற்கு எந்தமாதிரியான நடவடிக்கைகள் எடுத்தார்கள்? சில சீர்திருத்தவாதிகள் எல்லாம் அதை வரவேற்கிறார்கள். இதுமாதிரி மதுரை, சென்னை போன்ற இடங்களில் இப்படி போக்குவரத்துக்கு இடைஞ்சலாக புதிதாக வரக்கூடிய கோவில்களையாவது அந்த பக்தர்கள் மனம் நோகாத அளவிற்கு வேறு இடத்தில் வைக்கக்கூடிய முறையில் ஏற்பாடு செய்யப்படுமா? இப்போது அவை போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாகத்தான் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மேயர் பொறுப்பை ஏற்றவுடன் சொன்னார்கள். இப்போது அவர் போய்விட்டார். ஆனால், அரசாங்கத்தில் இருந்து அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுத்தால் அவரேகூட ஒரு போராட்டத்தைத் தொடங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

[1973 மார்ச் 27

திரு. நா. வீராசாமி : சென்னை நகரிலுள்ள நடைபாதைகளில் திடீர் திடீர் என்று கோவில்கள் உருவாவதைப்போல் திடீர் திடீர் என்று பயங்கரமான, ஆபத்தான சுவரொட்டிகள் இன்றையதினம் சென்னை நகரில் ஒட்டப்பட்டிருக்கின்றன. ஆனந்த மார்க்க சமாஜம் என்ற அமைப்பால் க்வீன் மேரீஸ் காலேஜ், லேடி வில்லிங்கடன் காலேஜ், ஜார்ஜ் டவுன், மின்ட் ஆகிய பகுதிகளில் 'இந்திராவின் கயமைத்தனத்தால் சாமியார் விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டார்', 'இந்திராவும் கருணாநிதியும் சேர்ந்து கொண்டு அமெரிக்கா-ரஷ்யாவிற்கு அடகு வைத்து விட்டார்கள்' என்ற ஆபத்தான சுவரொட்டிகள், மக்கள் மத்தியில் ஒரு தவறான எண்ணத்தை உண்டாக்கும் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன. இப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடைபாதைக் கோவில்களில் இருந்து நடைபாதைகளில் எழுதப்படுகிற எழுத்துக்கள் அளவிற்கு வந்து விட்டார்கள். ஆனால் ஒன்றை நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். சென்னை நகரில் சுவரொட்டிகள் ஆங்காங்கு எல்லாவிடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடுப்பதற்கு இன்னின்ன இடங்கள் என்று சிலவற்றை நிர்ணயித்து அந்த இடங்களில்தான் சுவரொட்டிகள் ஒட்டப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டு, முதல் கட்டமாக நம் கடற்கரைச் சாலையில் வானொலி நிலயத்தில் இருந்து கோட்டை வரையில் முதல் கட்டமாக சுவரொட்டிகள் ஒட்டாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று இப்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதற்கேற்ப, அந்த இடங்கள் எல்லாம் சுத்தம் செய்யப்பட்டு அங்கு சுவரொட்டிகள் ஒட்டக் கூடாது என்று அறிவிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், சுவரொட்டிகள்தான் ஒட்டக்கூடாது. எழுதினால் என்ன என்று எழுதக்கூடும். அதில் பிரதமரைப் பற்றியும், என்னைப் பற்றியும் எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். அதைபற்றியெல்லாம் காவல் துறையினர் கண்காணித்து வருகிறார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, நடைபாதைக் கோவில்களுக்கு ஆங்காங்கு இருக்கிற வட்டத்தைச் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கவுன்சிலர்கள்

1973 மார்ச் 27]

விளக்கங்கள் கொடுத்து, அதைக் கட்டுவதற்கு உற்சாகப் படுத்துகிறார்களே, அதற்கு அரசு என்ன செய்ய உத்தேசித் திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது நடை பாதைக் கோவில்கள் மாத்திரமல்ல, கொடிகளை நாட்டு வதற்காகவும் ஆங்காங்கு சில பீடங்கள் அமைத்து அந்தக் காரியமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கட்சிகள் கொடி மரங்கள் அமைப்பதும், பீடங்கள் அமைப்பதும் உள்ளபடியே போக்குவரத்துக்கு இடைஞ்சலாக நடைபாதைகளில் இருக் கின்றன. ஆகவே எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்து—இந்த ஒரு விஷயத்திலாவது எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்து அவற்றை அகற்றுவதில் ஆர்வம் காட்ட வேண்டும். தனித்தனியாக பீடங்கள் அமைக்கக்கூடாது என்பதில் எல்லோரும் ஈடுபட்டால் அரசு நிச்சயமாக ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

இராமநாதபுரம் மாவட்டம் வறட்சிப் பகுதிகளில் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளிவைத்தல் குறித்து.

திரு. கு. ஆண்டி என்ற குருசாமி : துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில், குறிப்பாக திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் வறட்சிநிலை காரணமாக விவசாயிகள் தங்கள் கடன்களைத் திருப்பித்தர மிகவும் அவதிப்படும் நிலையில் அவர் களுக்குக் கூட்டுறவுத்துறை மூலம் வழங்கப்பட்ட கடன்களை வசூலிப்பதை தள்ளிவைக்க வேண்டியது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் சில பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்ட உடனேயே எந்தெந்தப்